மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 2.	MADRAS: AUGUST 1900.	No. 6.
புத்த. ௨.	சென்னப்பட்டணம்; 1900 - ௵ ஆகஸ்டு-௴.	இல. ௬.

மாயாபுரி விநோதக்கதை.

(100-ம் பக்கத்தொடர்ச்சி)

பெரியோர்கள் வாழ்வையும், தாழ்வையும் ஒப்பமதிக்கிறார்கள். ஆதலால் தமக்குக்கவலையென்பதில்லை. சாதுக்கள் காட்டில் வசித்தாலுஞ் சுகத்தையே யடைகிறார்கள், எங்கும் பெருமையையேயடைகிறார்கள். செல்வசம்பத்திற் களித்து இறுமாப்பதும், வறுமை வருங்காலத்தில் மதிமயங்கி வருந்துவதும் கீழோர்செய்கை. "மாசுபடினு மணி தன் சீர்குன்றாதாம்" என்றபடி அறிஞர்க்கு வறுமைக் காலத்திலும் பெருமையே விளைகின்றது. தமக்கொரு குறைவுமில்லையானாலும் பூர்வஸ்திதியில் தம்மைப்பார்த்து மகிழப் புண்ணியம் பெறாதபாவியானேனென்று வருந்துகிறேன். அதிருக்கட்டும்; தாங்கள் வந்தகாரியமென்ன? என்றால் ஏதாவது உதவியாக வேண்டுவதுண்டோ? உண்டானால் செய்யச் சித்தமாய்க் காத்திருக்கிறேன் என்றார். ஐயரவர்கள்: நண்பரே! "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதானட்பாங்கிழமைதரும்" என்றபடி நல்லோரைக் கண்டமாத்திரத்திலேயே சிநேகமுண்டாகிறது. தம்மைக்கண்டபோதே பன்னெடு நாட்பழகிய உயிர்த்தோழனைப்போல மனங்களிக்கின்றது. ஆபத்துச்சம்பத்திரண்டிலும் ஒரே மாதிரியாக மனமொத்திருப்பவரே நண்பராவர். அவர்களே பந்துக்களெனப்படுவார். "அற்றகுளத்தி னறுநீர்ப் பறவைபோ, லுற்றுழித்தீர்வா ருறவல்லர், —அக்குளத்தில், கொட்டியுமாம்பலுநெய்தலும்போலவே, ஒட்டியுறுவாருறவு." என்றபடி வறுமையடைந்த காலத்திலும் கைவிடாதிருப்போரேயன்றிச் செல்வகாலத்தில் கூடவிருந்து சுகங்களையனுபவித்துக் கஷ்டகாலத்தில் தூரத்தில் நிற்போரொருபோதும் உறவினராகார். இக்காலத்தில் தம்மைப்போன்ற நேசரொருவர் இவ்வூரிலிருந்து என் மானங்காப்பாற்றியது தெய்வகிருபையேயாம். நிற்க, நான் வந்தகாரியங்கேளும்; விஜயலட்

சுமி, விசாலாட்சி குமாரத்தி மங்களாம்பாளை ஜகதீசனுக்கு மணம்பேசும்படி பிடிவாதஞ்செய்தாள். நானென்னசொல்லியுங்கேட்கவில்லை. அவளுக்குப் பிரத்தியட்சத்தில் புத்திபோதிக்கும்படிவந்தேன். வந்தவிடத்தில் நல்லவுபதேசம் பெற்றாள். இது போதுமானது. காலையிற்புறப்பட்டு ஊர்போய்ச்சேர்கிறேன், என்றார். விஜயலட்சுமி அண்ணாவென்று முத்தம்மாள் கணவனைக்கூவி ஏதோ சொல்லவாரம்பித்தாள். முத்தம்மாள் ஜாடைகாட்டக்கண்டு சும்மாவிருந்துவிட்டாள். பிறகு நாகம்மாள் எழுந்திருந்துபோய்விட்டாள். விஜயலட்சுமியம்மா? இந்த நாகம்மாள் விசாலாட்சிக்குத்தோழி. உன்மேல் வெறுப்புள்ளவள். அவளைநம்பி ஒன்றுஞ்சொல்லக்கூடாது. இவள் கலகத்துக்கே இங்கே வந்தாளென்று நினைக்கவேண்டும்; இனிமேல் தெரியும் பாரும், என்றாள். அப்படியா! நானறியேனென்றாள். முத்தம்மாள் விஜயலட்சுமியம்மா! நீவந்தவுடனே நானும்வந்து அங்கே நடந்தவற்றைப் பார்த்துக்கொண்டு வெளியில் நின்றுகொண்டிருந்தேன். குளத்துக்குக் குளிக்கப்போங்களென்ற வார்த்தைகேட்டதும் என்மனம் பொறுமல் காத்திருந்து உம்மையழைத்து வந்தேன். மேலேயென்ன யோசனை யென்றாள். சிவசுவாமி ஐயரவர்கள் யோசனையென்ன? நாம் வந்தசமாசார மின்னதென்று அறிவிக்காமலே ஊர்போய்ச் சேருகிறதே நல்லதென்று நினைக்கிறேனென்றார். எல்லாரும் அதுவேசரியென்றுதீர்மானித்துச் சும்மாவிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் மங்களாம்பாளுக்குத் தாய் தகப்பன் செய்கையொன்றும் பிரியப்படவில்லை. தன் மாமா மந்திரியாகவிருந்து வறுமையடைந்ததற்கு மனம்பதைத்துருகினாள். ஜகதீசனுடைய ரூபலாவண்யத்தையும், அடக்கமான குணத்தையும் கண்டு தன்முழு ஆசையுமவன்மேல் வைத்தாள். இன்னானுக்குக் கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தஞ்செய்த பிறகு மறுப்பதுமொரு ஞாயமோவென்று பொருமினாள். அவர்கள் வறுமையடைந்ததேயன்றி வேறென்ன குறைவுகண்டார்கள். "உடைமையும் வறுமையு மொருவழி நில்லா" வாகையால் மறுபடியுமவர்கள் தங்கள் செல்வத்தை யடையக்கூடாதோ; தற்காலத்தில் வறுமைப்பட்டாலும் ஜகதீசன் மேலான பதவியை யடையக்கூடாதோ? அவர்களாலே தானே யிவர்களிந்தப் பதவியையடைந்தார்கள். அம்மா அப்பாவோடு சண்டையிடும்பொழுதெல்லாம் என் அண்ணன் கொடுத்த ஆஸ்தியாலே தானே நான் ஜீவிக்கிறேன்! என்னைப் பார்த்துத்திட்ட உமக்குவாயுண்டோவென்று பலதரங்கேட்டிருப்பதை நாமறியோமோ? அதை மறந்திப்பொழுது இப்படிப் பேசுகிறாளே! இவ்வகையான குணமும், அழகும் நிறைந்த புருஷனுக்கு நியமிக்கப்பட்ட நாம் வேறொருவருக்குப் பெண்டா

கிறது நீதியாமோ! வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட நாயகனிறந்தமை பற்றியன்றோ திலதவதியார்தம்மாயுட் காலமுழுதும் கன்னிகழியாமல் தவம் புரிந்திருந்தார். அதுவன்றோ கற்புடைமை; அவளல்லவோ பெண். நாமும் அப்படியே வாக்குத்தத்தத்தினாலே ஜகதீசனுக்கு மனைவியாய்விட்டோம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபின் புருஷனிடத்திற் குற்றமிருந்தால் அவனை நீக்கலாமென்று கூறியவிதிகளும் இரண்டாம் பட்சமேயன்றி முக்கிய பட்சமல்லவே! அப்படியே நமக்கு நியமிக்கப்பட்ட கணவனும் அரசாங்கத்தில் வீற்றிருக்கத் தக்கவனாய், யாதொருகுறைவுமில்லாதிருக்க அவனை விலக்குதற்கு நியாயமென்ன! தெய்வமே இதற்கென்ன செய்கிறது. நாம் கட்டுக்குட்பட்டிருக்கிறோமேயென்று மனதுக்குள் பிரலாபித்தாள். இன்னமொருதரம் ஜகதீசனது மலர்ந்த முகாரவிந்தத்தைப்பார்க்கக் கிடைக்குமோவென்று வருந்தினாள். நாகம்மாள் வந்து அம்மா அவர்களிங்கே வருகிறதேயில்லையாம். அங்கிருந்தபடியே காலையில் புறப்பட்டு ஊருக்குப் போகிறார்களாம். அங்கே அவர்கள் பேசின பேச்சுச்சொல்லமுடியாவென்று சொல்ல, விசாலாட்சி நல்லகாரியமாயிற்றுப் போவென்று கூறினாள். நாகம்மாள் போனபிறகு விசாலாட்சி தன் மனதுக்குள் நினைத்ததாவது சநியன் தொலைந்தது. இனி யவர்களிங்கே வரமாட்டார்கள். மங்களாம்பாளை யலங்கரித்து அங்கேயனுப்பினால் அவ்வழகைக் கண்டு மனதெரிவார்கள். அதுவே நல்லதென்று நினைத்து, நாகம்மாளை மறுபடி கூப்பிட்டு, என் கருத்திது நீ யென்ன சொல்லுகிறாயென்ன? அவளும் அது நல்லயோசனையென்று கூறி மங்களாம்பாளை நல்ல வஸ்திராபரணாதிகளாலே யலங்கரித்துப் பார்த்து, இந்த நகைமுதலியவற்றை யவர்கள் பார்த்தவுடனிவ்வளவு பெரிய குடும்பத்தில் நாம் சம்பந்தஞ் செய்வது கூடாதென்று வெட்கிப்போவார்கள். நமது செல்வப் பெருமையுமவர்களுக்குத் தெரியுமென்று கூறி, நாகம்மாள் மங்களாம்பாளை யழைத்துக்கொண்டு முத்தம்மாள் வீடு வந்து, விஜயலட்சுமி அம்மா? உன் மருமகளைப்பாரும் என்று எதிரில் நிறுத்தினாள். மங்களாம்பாளிருவரையும் வணங்கினாள். விஜயலட்சுமி வாரியெடுத்து மடிமீதில் வைத்துக்கொண்டு என் கண்ணேயென்று முத்தமிட்டாள். நாங்களிரவில் வந்து உன்னையும் பார்த்துவிட்டுச் செலவு பெற்றுக்கொண்டு ஊருக்குப்போகலாமென்றெண்ணி யிருந்தோம் அஸ்தமித்ததும் நாங்களும் வருகிறோம்; அதுவரைக்கும் நீயுமிரு; சேர்ந்துபோவோமென்ன! மங்களாம்பாள் தலையையசைத்தாள். நாகம்மாள், அவளை நானென்வீட்டுக்கழைத்துக் கொண்டுவந்தேன். உங்களுக்குக் காட்டிப்போகலாமென்று நினைத்து இவ்வீட்டுக்குட் புகுந்தேன். இவ்வளவு விலையுயர்ந்த ஆபரணங்களோடிங்கே நான் விடக்கூடாது. என்னைக் கோபித்துக்கொள்வார்கள்

நீங்கள் அங்கே வந்தபோது பார்க்கலாமென்று மங்களாம்பாள் எழுந்திரு போவோமென்று கையைப்பிடித்துக் கூட்டிக்கொண்டுபோனாள். மங்களாம்பாள் கண்களில் நீர் ததும்பியது. அவளுக்குச் சம்மதமேயில்லை. கட்டாயத்தின்மேற் போய்விட்டாள், வீடுபோனதும் நாகம்மாள் விசாலாட்சியிடத்தில் நடந்தவற்றைச்சொல்லி அஸ்தமித்ததும் இங்கே வரப்போகிறார்களாம் என்று சொல்லிச் சிரித்துப் பரிகாசம் செய்தாள். வரட்டும்; என் கணவனும் வருவார்; அவர்களுக்குத் தகுந்த புத்திசொல்லிப் போகச் சொல்லுகிறேன் பாரென்றாள். அப்படியே செய்; விடாதேயென்று கூறி நாகம்மாள் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டாள்.

அஸ்தமிக்க ஒரு நாழிகைப்போதிருக்க விசாலாட்சி கணவன் வந்தார். விசாலாட்சி நாயகனைக் கண்டமாத்திரத்தில் கண்களில் நீர்பெருக எதிரே வந்து நின்று, நடந்தவைகளைச் சொல்லியழுது, என்னையிப்படி யவமானப் படுத்தலாமோவென்றுருகினாள். பெண்ணேயப்படியா! நான்போய் அவர்களுக்குப் புத்திசொல்லி வருகிறேன் என்றார். அது நியாயமல்ல! நீங்களங்கேபோனால் நமக்குத்தான் பெருமைக்குறைவு. அவர்கள் அஸ்தமித்ததுமிங்கே வருவார்களாம். அப்பொழுது பேசிக்கொள்ளலாம் என்று விசாலாட்சி தடுக்க, இருக்கட்டுமென்று கறுவிக்கொண்டிருந்தார், அஸ்தமித்திரண்டுநாழிகை கழிந்ததும் சிவசுவாமி ஐயரவர்கள் மனைவி, குமாரனோடும், முத்தம்மாள், அவள் கணவனிவர்களோடும் வந்துள்ளே நுழைந்தார். விசாலாட்சி கணவன் அவர் முகத்தைப்பாராமல், நீரென்ன காரியஞ் செய்தீர்!

தேவகுஞ்சரியம்மாள்.

இங்கிலாந்தில் ஸ்திரீகளின் நிலைமை.

(85-ம் பக்கத்தொடர்ச்சி).

சில ஸ்திரீகள் 17, 18, வயது ஆனபிறகு ஹைஸ்கூல் படிப்பில் தேர்ச்சியடைந்த பின், கர்டன், (Girton), நியூன்ஹாம் (Newnham) காலேஜ்களில் சேர்ந்து படிப்பார்கள். சிலர் வைத்தியம், சங்கீதம், சித்திரம் முதலான வேலைகளையும் கற்றுக்கொள்வார்கள். அடிக்கடி பெண்கள் ஆக்ஸ்போர்டு (Oxford) கேம்பிரிட்ஜு (Cambridge) சர்வகலாசாலை பரீட்சைகளில் ஆண்மக்களையும் மீறி முதன்மையாகத் தேறி கீர்த்தி பெறுவதை நீங்கள் பத்திரிகை மூலியமாய் படித்திருக்கலாம். இப்பொழுது கணிதசாஸ்திரங்களில் உலகமெங்கும் பிரசித்தி பெற்ற கேம்பிரிட்ஜு சர்வகலாசாலையில் கணித சாஸ்திர பரீட்சையில் ஒரு பெண் முதன்மையாகத் தேறி

தர்க்க சூடாமணி என்று பொருள் கொள்ளும் சீனியர் ரேங்களர் (Senior wrangler) என்னும் பட்டத்தை வகித்திருக்கிறாள். இன்னொரு மாது லாடின், கிரீக்கு முதலான பூர்வபாஷைகளில் முதன்மையாக தேறியிருக்கிறாள்.

இவ்விதமாக பரீட்சையில் தேர்ந்த மாதர்களில் சிலர் காலேஜுகளில், எக்காலமும் மகிமையும் சிறப்பும் தங்கிய உபாத்திமைத்தொழில் செய்வார்கள். வேறு சிலர் காவியங்கள், நாடகங்கள், (Novels) * கதைகள் முதலியகிரந்தங்களை நவீனமாய் எழுதுவார்கள். கதைப்புஸ்தகங்களானாலும் விசேஷ சாமர்த்தியத்தையும் கவனத்தையும் காட்டக்கூடியனவாகவே யிருக்கும். சிலர் பத்திரிகைகளுக்கும் நிருபங்கள் எழுதுவார்கள். இப்படி அநேக மாதர்கள் பிரசித்தி பெற்றிருப்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் இங்கிலாந்தில் கீர்த்தி பெற்ற கிரந்த கர்த்தாக்களில் பெரும்பாலோர் மாதர்களே. இன்னும் சிலர் நாடக சங்கங்களில் மெம்பர்களாய் சேர்ந்துகொண்டு கீர்த்திபெற்ற கவிசிரோமணிகளால் செய்யப்பட்ட சிரேஷ்டமான நாடகங்களைச் சிறப்புடன் நடித்து நற்பெயரும் புகழும் பெறுவார்கள். மற்றும் சிலர் சித்திரங்கள் எழுதி அதனால் ஜீவனம் செய்வார்கள். சிலர் சங்கீத வித்தையில் பாண்டித்தியமடைந்து ஜனங்கள் மனதை ரஞ்சிப்பார்கள். மற்றும் சிலர் வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்து உலகத்துக்கு பரோபகாரம் செய்வார்கள். வைத்தியத்திலும் சிகிச்சையிலும் ஸ்திரீகள் தங்கள் இயற்கையான அன்பினாலும் பொறுமையினாலும் நன்றாய் பிரகாசிக்க இடமுண்டு. இப்போது இங்கிலாந்தில் சிகிச்சை சாஸ்திரத்தில் கீர்த்தி பெற்ற ஸ்திரீ வைத்தியர்களனேகர் இருக்கிறார்கள். தவிர, அனேகர் வியாதியஸ்தர்களுக்குப் பணிவிடை செய்யும் வேலையிலமர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது தென்னாபிரிகாவில் நடக்கும் யுத்தத்தில் நமது ராச்சியத்தையும் பெயரையும் நிலைநிறுத்தும்பொருட்டு தம் பிராணனைப் பொருட்டாயெண்ணாமல் சண்டைசெய்து காயமடையும் யுத்தவீரர்களுக்குப் பணிவிடை செய்வதில், உயர்குலத்தில் பிறந்து நற்குண நற்செய்கைகள் நிரம்பி அமிர்தம் போல் இனிய குணமுள்ள அநேக ஸ்திரீகள் தம் மெய்மறந்து எவ்வளவு பாடுபட்டு உழைக்கிறார்கள் என்பது நமக்குள் யாருக்குத் தெரியாது? வாஸ்தவமாகவே வியாதிஸ்தர்களின் மீது அன்புகூர்ந்து அவரது மனதுக்குத் தக்கபடி யுபசரித்துப் பாதுகாப்பதில் புருஷர்கள் ஸ்திரீகளுக்கு ஒருபோதும் நிகராகமாட்டார்கள். ஏனெனில் ரோகிகளுக்கு இன்ன சமயத்தில் இன்னது வேண்டும், அவர்களிடம் இவ்விதமாக நடந்துகொள்ள

* மிஸ்ஸஸ் ஹென்ரி வுட் என்ற மாது சுமார் 40 கதைப்புஸ்தகங்களை எழுதி பிரசுரித்திருக்கிறார்.

வேண்டும், என்று அறிந்து அவர்கள் கஷ்டத்தைக் கருணைகூர்ந்து நிவர்த்திசெய்யும் குணம் ஸ்திரீகளுக்குக் கடவுள் இயற்கையிலேயே கொடுத்திருக்கிறார். அதைப் புருஷர்களிடத்தில் காண்பதரிது. சாதாரணமாய் ஸ்திரீகளின் அருமை தெரியவேண்டுமானால் நமக்கு உடம்பு அசௌக்கியமாயிருக்கும் காலத்தில் தான் அறியக்கூடும். அதனால் தான் ஸர் வால்டர் ஸ்காட் என்னும் ஆங்கிலேயக் கவிச்சிரோமணி ஸ்திரீகளுக்குப் "பணிவிடைத் தெய்வம்" என்று நாமமிட்டிருக்கிறார். அது மிகத்தகுதியே.

வேறு சிலர் இரக்கமற்ற துர்க்குணமுள்ள புருஷர்களால் கெடுக்கப்பட்டு தம்மதியீனத்தால் நன்னெறி தவறி விபசாரமாகிய பாவக்கடலில் மூழ்கித்தவிக்கிற ஸ்திரீகளிடத்தில் வீடுவீடாய்ப்போய் அவர்களுக்குப் புத்திமதியளித்து அவர்களை நல்வழியில் திருப்புவதற்காக மிகப்பாடுபட்டு வருகிறார்கள். "ஸ்திரீகளைத்திருப்ப ஸ்திரீகளே உபயோகப்படுவது போல, புருஷர் உபயோகப்படுவதில்லை, இந்த வழியில் அந்தஸ்தும் தனமும் பெற்ற ஸ்திரீகள் செய்துவரும் தர்மகாரியமானது இங்கிலாந்தில் விசேஷமாகப் புகழப்பட்டுவருகிறது." ஆகையினால் கல்வியாகிய ஆபரணமணிந்த ஸ்திரீகளினால் உலகத்தில் நன்மையும் பரிசுத்தமுமான காரியங்கள் எவ்வளவு செய்யப்படுகின்றன பார்த்தீர்களா.

மேற்சொன்னபடி இங்கிலாந்தில் ஸ்திரீகள் வீட்டிலும் வெளியிலும் ஜனங்களுக்குபகாரம் செய்வதற்காக பாடுபடுகிறார்கள். அச்சீமையில் ஸ்திரீகள் நன்றாய் படித்திருக்கிறபடியால் தம்தம் சிறுவர் சிறுமிகளுக்கு வித்தை கற்பித்து நற்போதனையளித்து நல்வழியில் நிறுத்துவார்கள். பள்ளிக்கூடங்களிலும் மற்றிடங்களிலும் ஒழுங்கு தவறி நடக்கும் முரட்டுப்பையன்கள் "உங்கள் தாயாரிடம் சொல்வேன்என்று சொன்னால் வழிக்குவந்து விடுவார்கள்" தவிர, பிள்ளைகளிடத்தில் "உங்கள் கெட்ட நடவடிக்கைகளினால் உங்கள் தாய் வருத்தப்படமாட்டாளா?" என்று சொன்னால் அப் பிள்ளைகள் தங்கள் தப்பிதங்களுக்காகவிசனப்பட்டு நன்னெறியில் நடக்க முயலுவார்கள். இங்கிலாந்தில் இன்னும் பல பேர் வீட்டுக்குப் போவதனால் தம் தாய்மார்கள் மனதுக்கு சந்தோஷம் உண்டாக்கவேண்டுமென்றும், அவர்கள் தங்களைக் கெட்டிக்காரர்களென்றும். பள்ளிக்கூடத்திலும் தங்கள் தொழில்களிலும் நல்ல பேர் அடைய வேண்டுமென்றும் உழைக்கிறார்கள். தென்னாபிரிகாவில் சண்டையில் மாண்ட அனேகம் யுத்த வீரர்கள் மரணகாலத்திலும் தம் தாய்மார்களைத்தியானம் செய்துகொண்டே பிராணனை விட்டார்கள்.

இதுவரையில் தாயார்தன் குழந்தைகளுக்கு எவ்வளவு உதவியாயிருக்கிறாளென்பதைப்பற்றிப் பேசினோம். இனிமேல் ஸ்திரீகள் தம் புருஷர்க

ளுக்கு எவ்விதங்களில் அனுகூலமாக இருக்கிறார்களென்பதை யோப்சிபோம். இந்தவிஷயம் நம்மால் விஸ்தரித்து சொல்லமுடியாது. இங்கிலாந்து சீமையில் ஒரு ஸ்திரீயானவள் தன் புருஷன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் உதவியாயிருப்பாள். விவாகம், பண்டிகைமுதலிய உற்சவகாலங்களிலும் இன்னும் இஷ்ட மித்திரபந்துக்கள் கூடும்விசேஷ சமயங்களிலும் அவள் அதிகாரம்வகித்து விருந்தினரைச் சந்தோஷப்படுத்துவாள். பெண்சாதியானவள் வீட்டுக்காரியங்களைக் கவனமாயும் ஜாக்கிரதையாயும் பார்த்து வருகிறபடியால் தான், புருஷன் வெளியிற்போய் கஷ்டப்பட்டு வீட்டுக்கு வருங்காலத்தில் சிரமபரிகாரம் செய்துகொண்டு சுகத்தையும் ஆநந்தத்தையும் அடைகிறான். அவள் தன் புருஷனது காரியங்களிலும் கருத்துகளிலும் எப்போதும் சிரத்தை யெடுத்துக் கொள்ளுவதுடன்கூட தனக்கு இயற்கையாய் அமைந்திருக்கும் சாமர்த்தியத்தினால் அவனுக்கு சமயங்களில் யுக்திசொல்வாள்.

இவையெல்லாம் அவளுக்குச் சாத்தியமாவதற்கு அனுகூலமாயிருப்பது அவளுடைய கல்விதான், அக்கல்வி எட்டுப்படிப்பு மாத்திரமல்ல. இளம்பருவத்தில் தனது தோழிகளுடன் பள்ளிக்கூடத்திலும், பிறகு தன் அனுபவத்தினாலும் பலசங்கதிகளைத் தன்வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்ளுகிறாள். புத்திசாதுர்யமும், தனது செல்வாக்கை உபயோகப் படுத்தும் முறையும், ஜனங்களுக்குப் பணி செய்வதின் பெருமையும், அதினாலுண்டாகும் மகிமையும், ஆத்மபரித்தியாகத்தினாலுண்டாகும் ஆநந்தத்தையும் அறிந்துகொள்ளுகிறாள், பிறகு, தாயாரிடம் தான் கற்றுக்கொண்டது போலவே தனது பெண்களுக்கும் கற்பிப்பாள். ஆகையால் ஆங்கிலேயர்களுக்கு " வீடு " என்று சொன்னமாத்திரத்தில் சொல்லக்கூடாத ஆநந்தமுண்டாவதற்குக் காரணம் என்ன வெனில்—தாயாராகவாவது சகோதரியாகவாவது, பாரியையாகவாவது விவேகமும் பெருந்தன்மையுமுள்ள ஒரு ஸ்திரீ அவ்வாலயத்தை அலங்கரிப்பதினால்தான்.

C. K. வேங்கிடகிரி சாஸ்திரியார். பி. ஏ.

ஸிம்பலைன்.

(89-ம் பக்கத்தொடர்ச்சி.)

3-வது அத்தியாயம்.

அப்பொழுது இயாக்கிமோ

" திகழுமேனகையோ திவ்ய ரம்பையோ
தேவியோ விலங்கு சீர் வச்சிராங்கி

அகலிகை யுருவமோ அழகு வாணியோ
வமர்ந்தெ னெதிர்படுத்த சாமளாங்கி
சகம்புக ழூர்வசியோ சந்திர மதியோ
தமயந்தியோ வீற்றிருக்குங் கோமளாங்கி
புகழ்பெறு சீதையோ புண்ணிய வுருவமோ
புன்னகையோ" டென்முன்னின்ற இமொஜ பாங்கி.

என்றிவ்வாறு தன் முன்னின்ற இமொஜனைப் புகழ்ந்து, ஐயோ இவளுடைய ரூபத்தைப் பார்த்தால் அதிக விசேஷமாயிருக்கிறது; அதேமாதிரியாக மனதும் களங்கமற்றிருந்தால் என்ன செய்வேன், தோற்றுப்போவேன் என் பெயருங்கெட்டுப்போமே. ஆனால் தைரியத்தை விடக்கூடாது தைரியமிருந்தால் எந்த காரியத்தையும் சாதிக்கலாமென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். இமொஜன் கடிதத்தை வாசிக்கிருள்.

"அவன் எனக்கு ஒரு பெயர்பெற்ற சிநேகிதன், என்னிடத்தில் அதிக பக்ஷமாயிருந்தான். ஆகையால் ஆலோஜித்து அவனுக்குத் தக்க மரியாதை செய்யவேண்டியது............................லீயோ நாட்டஸ்" கடிதத்தின் மற்ற விஷயங்களை வாசிக்கும்போது ஆநந்தக் கடலில் மூழ்கிவிட்டேன். இயாக்கிமோ! உனக்கு வந்தனஞ் செய்கிறேன், குறைவன்னியில் உன்னைத் தக்கமரியாதையுடன் உபசாரஞ் செய்கிறேன்.

இயாக்கிமோ.—ரதிக்கொப்பானவளே! வந்தனமளிக்கின்றேன். மனிதர்கள் பைத்தியம் பிடித்துப்போய்விட்டார்களா? ஈஸ்வரன் கண்ணைக் கொடுத்திருக்கிறூர்; அந்தக் கண்ணினல் மாணிக்கத்துக்கும் பருக்கைக்கல்லுக்கு முண்டானவித்தியாசத்தை யறியமுடியாதா? இது அழகு, இது அழகல்லவென்று தெரியாமற்போகுமா?

இமோஜன்.—இவ்வளவுதூரம் ஆச்சரியமடையும்படியாய் என்ன நேரிட்டது.

இயாக்.—கண்ணினுடைய குற்றமல்ல, ஏனென்றால் குரங்குகள்கூட ஒரு பெண் குரங்கைக் கண்டு அதிக அழகாயிருந்தால் பார்த்துச் சிரிக்கும், அழகற்றிருந்தால் அதைப் பார்த்து வெறுக்கும். இப்படியிருக்க மனிதர்களுக்கு இப்பேர்ப்பட்ட புத்தி வந்துவிட்டதே! கஷ்டம்!

இமோ.—விசேஷமென்ன. உள்ளதைச்சொல்.

இயாக்.—முதலில் தேவாமிர்தத்தைச் சாப்பிட்டுப் பசியடங்காமற்போனல் இழிவான பதார்த்தத்தையும் சாப்பிடுகிறது உலகவழக்கம்போல தோன்றுகிறது.

இமோ.—என் பிரியசிநேகிதனே உன் அளவில்லாத ஆச்சரியத்தின் காரண மென்ன சொல்வாயாக.

இயாக்.—(பிஸானியோவைப் பார்த்து) என்கூட ஒருவன் வந்தான் அவனுக்கு உபசாரஞ் செய்.

பிஸானியோ.—இதோ போகிறேன் (போய்விட்டான்.)

இமோ.—என் நாதன் சந்தோஷமாயும் சௌக்கியமாயுமிருக்கிறாரா ?

இயாக்.—க்ஷேமத்துடனிருக்கிறான், துக்கமே அவன் முகத்தில் இல்லை. அவனுக்குப் பிரான்ஸ்தேசத்திலிருந்து வந்த ஒரு சிநேகிதனுண்டு. தன் பாரியை ஏதோ ஒரு காரணத்தினால் அங்கேவிட்டு வந்ததினால் ஏக்கம் பிடித்துப் பெருமூச்சுவிட்டழுது கொண்டிருக்கிறான். ஆனால் பாஸ்துமஸ் அம்மனிதன் முன்னின்று கொஞ்சங்கூட விசன மில்லாமல் உடல் நோவும்படியாய் உருண்டுருண்டு சிரிப்பான். இவனைப்போல மனிதனை யிதுவரையில் நான் கண்டதில்லை. ஒன்றை நினைக்கிறபோது அதிக ஆச்சரியத்தையும் விசனத்தையுமடைகிறேன்.

இமோ.—ஏன் விசனப்படுகிறாய்.

இயாக்.—இரண்டு ஜந்துக்களைக் குறித்து விசனப்படுகிறேன்.

இமோ.—அதில் நான் ஒருவனா? என் விஷயத்தில் நீ இரங்கும்படியாய் என்ன இருக்கிறது.

இயாக்.—விசனத்திற் களவில்லை! சோதிப்பிரகாசமுடைய சூரிய வெளிச்சத்தைவிட்டு ஒரு இருட்டறையிலிருந்து யாராவது சந்தோஷப்படுவார்களா? இதுவரையில் ஒருவரையும் பார்த்ததில்லையே.

இமோ.—சந்தேகப்படும்படியாய் வைக்காதே. நான் கேட்கிற கேள்விக்குக் கபடமில்லாமல் உத்தரவுசொல். ஏன் என் விஷயத்தில் இரக்கப் படுகிறாய் ?

இயாக்.—உன்னுடைய பர்த்தாவை மற்றவர்களா——————நான் ஏன் சொல்லுகிறேன். இந்தப்பழியைத் தீர்க்கவேண்டியது கடவுளுடைய வேலை.

இமோ.—என்னைப்பற்றியுனக்குச் சில சங்கதிகள் தெரியும்போல தோன்றுகிறது. நமக்குத் தீமையை விளைவிக்குமோ, அல்லது நன்மையை விளைவிக்குமோ என்ற சந்தேகமானது, தீமையை விளைவிக்குமென்ற நிச்சயத்தைப் பார்க்கிலும், மனஸுக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்குமென்பதையறியாயா? அதிக சீக்கிரமாய்ச்சொல்ல நினைத்து உடனே சொல்லாமல் நிறுத்தின சங்கதியைத் தயவுசெய்து சொல்வாயாக.

இயாக்.—நான் முத்தமிட இப்பேர்ப்பட்ட கன்னங்களிருந்தும், தொட்ட மாத்திரத்தில் நான் உன் விஷயத்தில் அதிக விசுவாசமாயிருப்பேன் என்று சொல்லும்படிச்செய்யும் இந்தக் கைகளுமிருந்து, என் மனஸைக் கவரக்கூடிய இந்த ரூபவதியையு முடைத்தாயிருந்தால் என்னைப் பார்க்கிலும் பாக்கியசாலிகள் யார் இருப்பார்கள். ஐய்யோ இதைவிட்டு வேசையர்களோடு கூடிச்சுகத்தை யனுபவித்துக் கொண்டிருக்கிற உன் பர்த்தாவைத் தெய்வந்தான் கேட்கவேணும்.

இமோ.—ஐய்யோ என் நாதன் ப்ரிட்டன் தேசத்தை மறந்துவிட்டான் போல் தோன்றுகிறதே.

இயாக்.—ப்ரிட்டன் தேசத்தை மாத்திரமல்ல தன்னையே மறந்துவிட்டான். அவன் செய்கிற அநியாயங்களை யுன்னிடத்தில் சொல்ல எனக்கு இஷ்டமேயில்லை. ஆனால் உன் முகத்தின் காந்தியையும் சொரூபத்தையும் பார்த்தவுடன் எனக்கு இரக்கமேலிட்டு இதைச்சொல்லும்படியாய் நேரிட்டது.

இமோ.—இவ்வள்வுபோதும். என்னிடத்தில் வேறொன்றும் சொல்ல வேண்டாம்.

இயாக்.—என் பிரியமுள்ளமாதே! உன்னை நினைக்கிறபோது என் மனஸினுண்டான விஸனத்திற்களவில்லை. இரக்கப்பட்டாலும் பிரயோஜனமொன்றுமில்லையே. என் உயிர் போய்விடும்போல் தோன்றுகிறதே. இராஜபட்டத்துக்கு வந்து தேசத்தைக் கண்ணியப்படுத்தக்கூடிய ரதிக்கொப்பான உன்னை இட்டாலியாதேசத்து வேசையர்களுக்குச் சமானமாக வைக்கிறது என் மனம் சகிக்கவில்லையே. இதை மறந்துவிடாதே. நீ பழிக்குப்பழி வாங்காவிட்டால், உன்னைப் பெற்றவள் இராணியுமல்ல, நீ இராஜவம்சத்தில் பிறந்தவளுமல்ல.

இமோ.—எவ்விதமாய்ப் பழிக்குப்பழி வாங்குகிறது. அவனிடத்தில் நான் அதிக விசுவாசமாயிருக்கிறதினால் ஒருவர் சொல்லுகிறதை நம்பமாட்டேன். நீ சொல்லுகிறது உண்மையானால், நான் எவ்விதமாய்ப் பழிவாங்குவேன்?

இயாக்.—நான் உன்னைக் கலியாணம் பண்ணி உன்னுடன் சுகமாய் வாழ்ந்து அந்தத்துரோகிப்போலிராமல், அதிக பிரியமாயும், விசுவாசமாயும், பதிவிரதா தருமத்தைக் காத்துக்கொண்டிருக்கிறேன். இதற்காக என் விஸனப்படுகிறாய். ஒருவர் விசுவாசமில்லாமலிருந்தால் எல்லாரும் அதேமாதிரியாக இருப்பார்களா?

இமோ.—என்னடா சொல்லுகிறாய். ஏ. பிஸானியோ! பிஸானியோ!

இயாக்.—நான்உன்னை ஒருமுகூர்த்தமிடச் சம்மதிக்கவேணும். விரோதஞ் சொல்லாதே.

இமோ.—சீ! சீ! என்முன் நிற்காதே. இவ்வளவுதூரம் நீ சொன்னவற்றைக்கேட்டுக்கொண்டிருந்த என்காதுகளைப் பழிக்கிறேன். நீ யோக்கியனானால் நீசொல்லிய கருத்து நிறைவேறஅல்ல, விளையாட்டுக்குச் சொன்னேனென்றுசொல் சிறந்த யோக்கியதையையுடைய என் பர்த்தாவை நீ இப்படியா பழித்தாய்; உன்னையும், பிசாசையும் வெறுக்கிற என்னுடைய பதிவிரதா தருமத்தைக் கெடுக்கவா வந்தாய்! நீசெய்த அநியாயத்தை என்தகப்பனிடத்திலுரைக்கிறேன். ஏ பிஸானியோ இங்கேவா!

இயாக்.—ஏ. லியோநாட்டஸ்! உன்னைப்போல சந்தோஷமுள்ளவனையும் பாக்கிய முள்ளவனையும்நான்கண்டதே இல்லை. உன்னுடையகற்பு அழிவின்றியிருப்பதை நான்பார்த்திருக்கிறேன். அதைப்பார்க்கிலும் உன்னுடைய பத்தினி அதை யதிகவிசுவாசத்துடன் காப்பாற்றிக்கொண்டு வருகிறாள், அவள் உன்னைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறதும், நீயவளைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறதும் கொஞ்சமாகிலும் மாறவில்லையே; இமொஜன் அருந்ததிக்குச் சமமாயிருக்கிறாள், அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம் கடவுள் உங்களை யாசீர்வதிக்கட்டும் உனக்குப் பர்த்தா அவன்தான், அவனுக்குப்பத்னி நீதான், இமோஜன்! என்னை க்ஷமிக்கவேணும். அவன் நினைத்தபடி நீ விசுவாசத்துடனிருக்கிறாயாவென்று அறிய இவ்வார்த்தைகளைச் சொன்னேன். அவனுடைய குணங்களையும் நடத்தையையும் என்னால் விவரிக்க முடியாது. எந்த சபையில் போனாலும் அவனைப்பார்த்து மயங்காதவர்கள் ஒருவருமில்லை. அவன் தேவலோகத்திலிருந்து வந்த தெய்வத்தைப்போலிருக்கிறான். அவனுடைய யோக்கியதையைப்பார்த்தால் அவனை மனிதனென்று சொல்ல முடியாது. நான் பொய்சொல்லியுன்னை நம்பும்படியாகப் பிரயாசைப்பட்டதைப்பற்றிக் கோபித்துக்கொள்ளாதே அந்த யோக்கியனை நீ. கலியாணஞ்செய்தது எவ்வளவு பாக்கியஞ் செய்திருக்கவேணும். எனக்கு அவனிடத்திலிருக்கிற அன்பானது உன்னைப் பரீக்ஷைசெய்ய நேரிட்டது. நீ மகாபதிவிரதை, ஒன்றுக்கும் அசையவில்லை. க்ஷமித்துக்கொள்ளவேணும். மாதே க்ஷமிக்கவேணும்

இமோ.—நல்லது, க்ஷமித்தேன். என்பேரைச்சொல்லி இந்த அரண்மனையில் எல்லாக் காரியங்களையும் நடத்திக்கொள்.

இயாக்.—வந்தனஞ்செய்கிறேன், ஒருமுக்கியமான விஷயத்தைப்பற்றி யுன்னிடத்தில் சொல்ல மறந்துவிட்டேன். உன்னுடைய பர்த்தாவும், மற்றவர்களும் அந்தக்காரியத்துக் குடையவர்கள்.

இமோ.—அதென்னசொல்.

இயாக்.—பத்து, பன்னிரண்டு ரோமன்ஜாதியாரும், உன்பர்த்தாவும் சில விலையுயர்ந்த ஆபரணங்களையும் வெள்ளித்தட்டுகளையும் வாங்கிச் சக்கரவர்த்திக்கு வெகுமானமாகக்கொடுக்கப் போகிறார்கள். அது என்னிடத்திலிருக்கிறது. நீபத்திரமாய்வைத்துக் கொள்ளவேணும்.

இமோ.—அதிகசந்தோஷம். அதைக்காப்பாற்ற என்கற்பைவேணுமானால்அடகு வைக்கிறேன். என்பர்த்தா அதில் பிரியப்பட்டதினால் என்படுக்கையறையில் அதை வைத்துக்கொள்ளுகிறேன். பயப்படவேண்டாம்.

இயாக்.—அதை ஒரு பீப்பாயில் வைத்திருக்கிறேன். இன்று இராத்திரி மாத்திரம் வைத்துக்கொள்ளவேணும் நாளைஊருக்குப் போகிறேன்.

என்று சொல்ல அதற்கு இமொஜன் நீ நாளைக்குப் போகவேண்டாம். சில நாள் இங்கே இருந்துவிட்டுப் போகவேணுமென்றுரைக்க, அவன் சம்மதிக்கவில்லை. அப்பொழுது இமோஜன் நான்ஒருகடிதம் தருகிறேன். அதையென் பர்த்தாவிடத்தில் கொடுக்க வேணுமென்று சொல்லி பீப்பாயைக் கொண்டுவரும்படியாய் இயாக்கிமோவையனுப்பிவிட்டாள்.

இதைவாசிக்கும் நண்பர்களே! இயாக்கிமோ தெய்வத்துக்குச் சமானமான இமோஜனை வருத்தப்படுத்தினதை நினைக்கிறபோது எவ்வளவுவிஸனமாயிருக்கிறது. அந்தத்துரோகி தன்னால் கூடிய சிரமமெடுத்துப் பாஸ்துமஸைப்பழித்து, இமோஜனுடைய இருதயத்தைக் கவரப்பார்த்தான். அவள் ஒன்றுக்கும் அசையவில்லை. இயாக்கிமோவின் குணம் இதுமாத்திரமல்ல. இனிஅவன் செய்யப்போகிற சங்கதிகளைப் பார்த்து அவனுடைய குணங்கள்முழுவதையும் அறிவோம். இயாக்கிமோ போனவுடன் அவன் பாஸ்துமஸனுடைய குணங்களைப்புகழ்ந்துரைத்ததை இமோஜன் எண்ணிப்பேரானந்தக்கடலில் மூழ்கி இன்புற்றிருந்தாள்.

வி. கோபால ஐயங்கார், பி.எ.

மிஸ்ஸஸ் கிளாட்ஸ்டன் துரைசானி.

நம் சக்கிரவர்த்தினியார் ஆட்சியில் பிரதான மந்திரித்வம் வகித்தவர்களில் முதன்மை பெற்றவரான மிஸ்டர் கிளாட்ஸ்டனின் பத்தினியார்

சென்ற ஜுனில் பரமபதம் அடைந்தார் என்றறிய துக்கிக்காதவர்கள் எங்கும் இரார்கள். எல்லா விதத்திலும் மகானுகிய மிஸ்டர் கிளாட்ஸ்டனுக்கு இல்லறத்துணையாய், அவர் பிரியத்துக்கும், மதிப்புக்கும், பாத்திரமாய், அம்மந்திரிக்கு மந்திரியாய், அவர் கவலை யொழிக்கும் கற்பகமாய், அவர் செய்த ஒவ்வொரு நற்காரியத்திற்கும் இன்றியமையாத ஒரு தூண்டுதலாய், கணவர் தன்னைப்பிரியும் வரையும் இருந்த இந்த உத்தமி காலஞ்சென்றது இவ்வுலகமாதர்களுக் கெல்லாம் தாங்கித் தரிக்க மாட்டாத பெரு நஷ்டமாம்.

இந்த அம்மாளுக்கும் கணவருக்கும் இருந்த அந்நியோந்நியம் ஒரு சிறுகதையால் நன்று விளங்குகிறது.

மிஸ்டர் கிளாட்ஸ்டன் மந்திரித்துவம் நடத்துகையில் அவரிடம் ஒரு பெரிய மனிதர் மகாமுக்கியமான ஒரு ராஜ்யகாரியத்தைக் குறித்து அந்தரங்கத்தில் பேசவந்தார். பேசுகையில் சமீபத்தில் கதவண்டை கிளாட்ஸ்டன் மனைவி நிற்கக்கண்டு புதிதாய்ப் பேசவந்தவர் அந்தக்கதவைச் சாத்திவிடட்டுமா என்று கிளாட்ஸ்டன் சம்மதியைக் கேட்க, கிளாட்ஸ்டன் "வேண்டாம், தேவையில்லை. இராஜ்யகாரியங்களில் நான் என்பத்தினிக்கு தெரிவித்து, அவளுடன் கலக்காதது இது வரையில் ஒன்றுமில்லை. ஆயினும் இரகசியம் தப்பி இசைகேடாய் வெளிவந்ததும் இது வரையில் ஒன்று மில்லை. ஆகையால் அவள் இருக்கட்டும்" என்றார். இதைக் கேட்டதும் வந்தவர் தாம் அறியாமையால் அப்பத்தினியாருக்குச் செய்த அநுசிதத்திற்காக தலை கவிழ்ந்து மன்னிப்பு கேட்டார். இதன்றி கிளாட்ஸ்டன் பிற்காலத்தில் வயது முதிர்ந்தும் மந்திரித்துவத்தைவிடாது நடத்தியபோது காமன்சபைக்கும் மற்ற சபைகளுக்கும் அடிக்கடிபோய் பேசவேண்டிநேரும். அப்போதெல்லாம் தவறாது இவரது பத்தினியாரும் கூடப்போவார்; பேசியானதும் தம்கணவருக்கு நெஞ்சு வறளும், களைப்புத் தட்டும் என்று விசாரத்தோடு குளிர்ந்த திராவகக்குப்பியும் கையுமாய் அவரை அணுகி அதை அவருக்கு ஊட்டுவாராம். இவ்விதக் கதைகள் இத்தம்பதிகளைப்பற்றி பலவுண்டு. இந்த அம்மாளல்லவா "பர்த்தாவுக்கு எற்றபதிவிரதை" இது வன்றோ மெய்யான இல்லறவொழுக்கம், மற்றவைபேரில் மட்டும் இல்லறம்; அல்லது இல்லறமில்லறம். பழையவழி இல்லறத்திற்கு வள்ளுவர்—வாசுகியின் வாழ்க்கையைப் பிரமாணமாக எடுத்துக்காட்டுவதுபோல இக்காலத்துக்கேற்ற இல்லறத்திற்கு பிரஸ்தாப தம்பதிகளைப் பிரமாணமாகக் கொள்ளலாம்.

பெருந்திருவாம்பிகை

முன்னொருகாலத்தில் நிலவளம் நீர்வளம் முதலிய எல்லாவற்றானும் சிறந்து விளங்கியதோர் நாட்டில் அளகாபுரி என்று ஓர் நகர் இருந்தது. அதில் இராஜசேகரன் என்று ஓர் அரசன் இருந்தான். அவன் கல்வி அறிவு ஒழுக்கம் என்ற எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினான். ஆகையால் குடிகளுக்கு அவனிடத்தில் அதிக விசுவாசம் இருந்தது. அவன் குடிகளையெல்லாம் தன் சொந்தப் பிள்ளைகளைப்போலப் பாதுகாத்துவந்தான். அவர்களும் அவனைத் தங்கள் பிதாவைப்போல அபிமானித்து வந்தார்கள். அவ்வரசனுக்குத் தக்கவயது வருதற்கு முன்னரே அவனுடைய பிதா மாதாக்கள் இறந்துபோய்விட்டார்கள். ஆதலால் அவனுடைய பெற்றோர்களால் அவனுக்கு விவாகம் செய்விக்கப்படவில்லை. அவன் தனக்கு வயதுவந்து இராஜ்யத்தைக் கைக்கொண்டபின்னும் சிலகாலம் வரை என்ன காரணத்தாலேயோ தானாகவும் விவாகஞ் செய்துகொள்ளவில்லை. இது அவன் குடிகளுடைய உள்ளத்தில் ஒரு பெரிய குறைவாக இருந்தது.

தன் குடிகள் எதையாவது பற்றித் அறிவித்துக்கொள்ளவேண்டுமென்று தன்னிடம் வந்தால் தடையின்றி அவர்களைத் தன் சமுகத்துக்கு அழைத்து அவர்கள் கூறுவதைக் குளிர்ந்த முகத்துடன் கேட்பது அவன் வழக்கம். ஆதலால் குடிகளெல்லாரும் ஒருநாள் அவன் சமுகத்திற்கு சென்று அவனை அடிபணிந்து நோக்கி "ஐயா, எங்கள் உள்ளத்தில் ஓர் குறை இருந்து வருத்துகின்றது. தாங்கள் அதைத்தீர்த்து அனுக்கிரகிக்க வேண்டும். அக்குறை என்னவென்றால் எங்கள் தாதை மூதாதைகளைத் தங்கள் தாதை மூதாதைகள் ஆதரித்துவந்தார்கள். எங்களையோ தாங்கள் அருமையாக ஆதரித்து வருகின்றீர்கள். அதுபோல எங்கள் பின்னோர்களை ஆதரிக்குமாறு தாங்கள் ஓர் புதல்வனைத் தந்தருளாதிருக்கின்றீர்களே என்பதுதான் எங்கள் உள்ளத்தை வருத்தும் குறை. குடிகள் குறையை நீக்கவென்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற தாங்கள் பெருங்கருணைகூர்ந்து இக்குறையை நிவர்த்திக்கப் பின்வாங்கமாட்டீர்கள் என்று நம்புகின்றோம்.

யாராவது நல்லவர்கள் பெரியவர்களாக உள்ளவர்கள் தங்களைப் போன்றவர்களைக் காணும்பொழுது முதலில் தங்களுக்கு எவ்வளவு திரவியமிருக்கும்? தங்கள் கீர்த்தி எவ்வளவு பரவியிருக்கும்? வேறென்ன பெருமைகளுண்டு? என்று கேட்பதில்லை. இவைகளைப்பற்றிப் பின்பு கேட்பினும் கேட்பர். கேளாதொழியினும் ஒழிவர்; அன்றியும் நெருங்கிப்

பழகுமுன் அவற்றைப் பற்றிக் கேட்பது முறையும் அல்ல. முதலில் கேட்பது தங்களுக்கு எத்தனை பிள்ளைகள் உண்டு என்பதுதான். அப் பிள்ளை இல்லாதவர்கள் வேறு எவ்வெவற்றை உடையவர்களாக இரு ந்தாலும் உடையேம் என்று சொல்லாமல் இல்லேம் என்றுதானே சொல்லவேண்டும். இதுபற்றியே "பொன்னுடையரேனும் புகழுடையரே னும் மற்றென்னுடையரேனும் உடையரோ" என்றார் பிறரும். ஒருவன் நாட்டைப் பெறினும் நற்பொருள் பெறினும் அவைபேறு எனப்படா, புத்திரப்பேறே அன்றி வேறு எதுவும் பேறெனப் படாமையை "பெ றுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்தமக்கட்பே றல்லபிற" என்ற திருக்குறளால் நாயனாரும் நன்குவிளக்கியருளினார். பொருளென்ற பெ யரும் அம்மக்களுக்கே ஏற்றதாகவிருக்கின்றது. "தம்பொருளென்ப தம்மக்கள்" என்றுதானே பெருநாவலர் கூறினார். ஒருவர் தம் காதால் என்ன சாஸ்திரங்களைக், கேட்டாலும் குழலோசை யாழோசை முதலி ய என்ன இசையைக் கேட்டாலும் குழந்தையினது இளமழலையைக் கேட்கும் பாக்கியம் பெறாவிட்டால் அவையெல்லாம் என்னபயன் தரும்! ஒருவர்க்குத் தம்மக்கண் மழலையே அல்லாமல் பிறமக்கள் மழலை அவ்வளவு இன்பம் தராது. இதுபற்றித்தான் நாயனார் "குழலினி தியாழினி தென் பதம் மக்கண் மழலைச்சொற் கேளாதவர்" என்ற குறளில் மழலை எனப் பொதுப்படக் கூறாமல் தம்மக்கண் மழலையென்று சிறப்பித்தார். இம்மை யின்பங்களெல்லாவற்றினும் சிறந்தது புதல்வர்களால் உண்டாகும் இன் பமேயல்லாமல் என்ன இருக்கின்றது? புத்திரபாக்கியம் இல்லையானால் வாழ்நாளே பயனற்றது என்பதில் என்ன தடை?

"படைப்புப்பல படைத்துப் பலரோடுண்ணு, முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக் குறுகுறு நடந்து சிறுகை நீட்டியிட்டுந் தொட்டுங் கவ்வியுந்துழந்து நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து மயக்குறு மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லைதாம் வாழுநாளே" என்று பாண்டியன் அறிவுடைநம்பி என்போன் கூறியது தாங்கள் அறியாததல்லவே! சிரார்த் தாதிகர்மங்களைச் செய்யும் புத்திரப்பேற்றை நாம் கவனிக்கவேண்டுவது அவசியமல்லவா? இதுபற்றித்தானே மிருககண்டுயோர் ஆதிய தவத்தைப் புரிந்து மணத்தை வெறுத்திருந்த தபோதனர்களையும் பெரியோர்கள் கிரகஸ்தாச்சிரமத்திற் புகுத்தினார்கள். இறந்தபின் எள்ளுந்தண்ணீரும் இறைக்க ஒருவர் இல்லாதிருப்பது பெருங்குறைவென்று கருதியே அல் லவா? அரக்கனாகிய கும்பகர்ணனும் விபீஷணனைச் செல் என்றனன். எள் ளுந் தண்ணீரும் இறைக்க வம்சத்தில் ஒருவன் இருப்பதைவிடப் புத்திரன் என்றே ஒருவன் இருப்பது விசேஷமென்பதில் தடையென்ன? அன்றி

யும் தாங்கள் இவ்வளவாக அபிமானித்து ஆதரித்துவரும் குடிகளைக் கிளியைவளர்த்துப் பூனைகையில் கொடுப்பதுபோல அயலானொருவன் கொள்ளுமாறு விட்டொழிவது நியாயமா? ஆதிமுதற்கொண்டு வழிவழியாக வாழை அடி வாழைபோல விருத்தியாகிக்கொண்டுவந்த தங்கள் வமிசம் தங்களோடு அற்றுவிடலாமா? ஆதலால் பிள்ளைப்பேற்றை உத்தேசித்துத் தாங்கள் விவாகம் புரிந்துகொள்ளவேண்டும் என்பதுதான் எங்கள் பிரார்த்தனை. எல்லாந்தெரிந்த தங்கள் சமுகத்தில் அடியேங்கள் தந்தையிடத்தில் தங்களுக்குவேண்டிய நியாயமான விஷயங்களைக் கேட்கப் பிள்ளைகள் பின்வாங்காவாறுபோலத் தங்கள் பொறுமையும் அன்புங்கொள்ளும் இயல்பறிந்து விண்ணப்பிக்கத் துணிந்த வரம்புகடந்த நடையை மன்னித்து, தங்கள் விவாகமகோற்சவத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தை எளியேங்களுக்கு விரைவில் அனுக்கிரகிக்கவேண்டுகின்றோம்" என்றார்கள்.

இன்னும் வரும்.

சுதேசநேசன்.

உயர்ந்த கல்வியினல் வரும்பெருமையும் அற்பகல்வியினல் வரும் சிறுமையும்.

தலைப்பில் அற்பகல்வியினல் வரும் சிறுமையும் என்றதினலேயே அபாரமான கல்வி கற்கச் சாத்தியப்படாதவர்கள் சாதாரணமாய் எழுதப் படிக்கவாவது தெரிந்துக்கொள்ளக் கூடாதென்பது எமது அபிப்பிராயமல்ல. பின்னை என்னெனில் நமதரிய சிறுமிகளின் கல்வியை நன் மார்க்கமான விதத்தில் திருத்தல் வேண்டுமென்பதே. அதாவது நமது மூதாதைகளின் குணதிசயங்களையும் கடவுளின் கருணை நிறைந்த பெருமைகளையும் கற்பரசிகளின் விருத்தாந்தங்களையும் பரோபகாரத்தையும் நல்வழியடையக் குடும்பமார்க்கமுதலானவைகளைக்கூறும் இதிகாச புராணங்களையும், பொது விஷயங்களையும் கல்வியின் விருத்திகளையும் நம்மனதில் ஊன்றுமாறு தூண்டி நம்மைச் சோம்பற்குள்ளாக்கி வாழ்நாளை வீண் நாளாகக் கழிக்கச் செய்யாமலிருக்கிற பேப்பர் முதலானவைகளை படிக்கச்செய்தும் செய்யுள் முதலான மார்க்கங்களைக் கற்பித்து அடியார்களின் பெருமைகளை அறிவித்தும் அவர்கள் அறிவை நன்மார்க்கத்தில் விர்த்திசெய்யாமல் கலியாணங்களில் பாட்டுபாடுவதற்காகவும் மாமியார் வீட்டில் நடக்கும் கொடு

மைகளை எழுதியனுப்புவதற்காகவும் சாதாரணமாய் எழுதப்படிக்கத் தெரிந்தால் போதுமென்கிற அபிப்பிராயப்பட்டு அவ்வளவிற்குத் தேர்ந்ததும், இந்திரசபா, பத்மினிசபா, சிங்காரஜாவளி, இன்னும் கலியாணங்களில் சொல்லக்கூடிய பரிகாசப்பாட்டுப் புஸ்தகங்கள், இவைகளைப் படித்துத் தேர்ந்தவுடன் தாய்மார்கள், சுற்றத்தார் இவர்கள் பொழுதுபோக்குவதற்காக 12- மந்திரிகதை, 32 பதுமைகதை, தென்னல்ராமன்கதை முதலான வேடிக்கைகதைகளையும் அல்லியரசாணிமாலை, பவழக்கொடிமாலை, புலந்திரன்களவு, நல்லதங்கைபாடல், ஏணியேற்ற முதலாகிய பாடல்களையும் இன்னும் அற்பர்கள் படிக்கக்கூடிய பொய்க்கதைகளையும் படிக்கச்செய்து களிக்கின்றார்கள். ஐயோ பாவம்! அத்தகைய சிறுமிகள் அசட்டுத்தனமான சம்பாஷணையும் தெரியாமைத்தனமான கர்வமும் அடையாமல் நன்மார்க்கத்தை எங்ஙனம் அடைவார்கள்? இவ்வித அசம்பாவிதங்களெல்லாம் அவர்களைப் போஷிக்கும் தாய்மார்கள் அறிவினராயின் எங்ஙனம் நேரும். நிற்க, இதைப்பற்றி சமீபத்தில் நடந்த சம்பாஷணை ஒன்று என்ஞாபகத்திற்கு வருகிறது. அடியில் வருமாறு.

ஜானகி :—இப்பொழுது நீ எவ்விடம் போயிருந்தாய். நான் வண்டியில் வந்த அலுப்பில் நித்திரைபோய்விட்டேன். கண்விழித்துப்பார்த்தால் ஒருவரையுங்காணோம். பொழுதுபோகவில்லை உட்கார்ந்திருக்கிறேன்.

கமலம் :—நான் போனவிடத்துக்கு உங்களையும் அழைத்துப்போகத்தான் உத்தேசம், அலுத்து நித்திரை செய்தபடியால் நாளைக்காகட்டுமென்று போய்விட்டேன்.

ஜா :—அதென்ன சங்கதி எந்த இடம் போனாய்? என்னையும் அழைத்துப்போக உத்தேசமென்றதால் என்னமோ அதிசயம்போல் தோற்றுகிறது.

கம :—அது விஷயம் மிக்க அதிசயமானது தான். நாமும் பெண்களாய் தான் பிறந்தோம்: என்ன பிரயோசனம், என்னெனில் அந்தத்தெருவில் இமையவல்லி என ஒரு அம்மாள் இருக்கிறார்கள். என்னபடிப்பு! என்ன கல்வி! தவிரவும் மிகவும் நல்லவர் அந்த அம்மாள் பெரிய புராணம், பாகவதம் முதலியவைகளைப் படித்து அருத்தம் சொல்லுகிறார்கள். அநேகம் பேர்வந்து கேட்கிறார்கள். கர்ணாமிர்தமாயிருக்கிறது. நான் அங்குதான் தினம் போய்வருவேன்.

ஜா :—இது தானா உனக்கு மிகுந்த ஆச்சரியமாய்ப் போய்விட்டது. நான் என்னமோவென்று பார்த்தேன். "ஆலையில்லாவூருக்கு இலுப்பைப்பூ

சர்க்கரை'' இப்போது படியாத பெண்கள் யார். நேற்றெல்லாம் குழந்தை சந்திரகாந்தம் புலந்திரன்களவுமாலையை வாசித்துக்கொண்டிருந்தாள். பாட்டுப்புஸ்தகம் எதுவானுலும் படிப்பாள். நாளைக்கு வரப்போகிறுளே நீ பார்த்தால் தெரிகிறது. நம்மைவேணுமானுல் ஆதியில் முட்டாளாக்கி வைத்துவிட்டார்கள். இக்காலத்துப் பெண்களுக்கா சொல்லவேண்டும்.

கம:—அப்மா நான் சொல்வதைக் கவனியுங்கள். இமையவல்லியினுடைய படிப்பையும் மற்றவர்களுடைய படிப்பையும் சமமாய் சொல்லிவிட வேண்டாம். அர்த்தக்கியானம் வந்த படிப்புக்கும் குட்டிபாடப் படிப்புக்கும் வித்தியாசமில்லையா ?

ஜா:—அதென்னமோ அர்த்தக்கியானமோ வெறுங்கியானமோ ? குழந்தையும் இரண்டாம் பாடம் அர்த்தமென்று படித்துக்கொண்டிருப்பாள். பள்ளிக்கூடத்திலிருக்கும்போதே அவைகளெல்லாம் படித்தாய்விட்டது. நேற்று படித்த புலந்திரன்கதைக்கும் அவள் தான் அர்த்தம் சொன்னுள். இமையவல்லி மாத்திரம் என்ன அதிகம். நாளைக்கு குழந்தையும் வரட்டுமே எல்லாரும் போய்பார்ப்போம்.

கம்:—அம்மா சந்திரகாந்தமும் வந்து விட்டாளே நாம் இமையவல்லி வீட்டுக்குப்போய் வருவோமா ?

ஜா:—சந்திரகாந்தம் வருகிறுயா ?

சந்:—என்ன அம்மா அதிசயமான படிப்பு இக்குப்பக்காட்டில் இருப்பவர்களுக்கல்லவோ இவையெல்லாம் அதிசயம். நீகூட என்ன அவர்களுடன் சேர்ந்துகொண்டாய். என்னுடன் கூடப்படித்த எவ்வளவு பெயரை நீ பார்த்திருக்கிறுய். ஆனுல் அவர்களெல்லாம் மாமியார் விடுபோய்க் குடும்ப வேலையிற் சிலரும் புருடருடைய பயத்திற் சிலரும் மறந்துபோயிருப்பார்கள். ஆனுல் பாட்டுக்கள் ஒன்றுகூட ஒருவரும் மறக்கவில்லை.

ஜா:—குழந்தாய் நன்று பட்டணத்தாவுகளில் இருந்தத்தினுலேயே எல்லாருக்குமே கல்விமேம்பாடும் அதற்கனுகுணமான அடக்கம் நிதானமுதலியவைகளையும் உடைத்தாயிருக்கிறுர்களென்று எண்ணவேண்டாம். 100-ல் ஒருவர் விவேகிகளாய் எவ்விடத்துமிருக்கிறுர். குழந்தாய் நான் சொல்லும் இமையவல்லிக்கிருக்கும் அபாரமான கியானத்துக்குத்தக்கபடி அவளிருக்கும் அடக்கமும், ஆதரவும், கர்வமின்மையும் வந்துபார். அற்ப அறிவினர்களுடனும் உன்னைப்போல அலக்ஷியமாய்ப் பேசமாட்டாளே. அனைவரையும் அனுசரிப்பாளே. தானுகத்

தனக்குத் தெரிந்தவைகளைப்பற்றி மறந்தும் பேசாளே. விரும்பின வர்களுக்கு விளங்க உரைப்பாள். இதைத்தான் படிப்பில் வித்தியாச முண்டென்று நேற்று நான் பிரஸ்தாபித்தது. பார்த்தீர்களா அம்மா சந்திரகாந்தம் தெளிந்த அறிவில்லாமையினாலன்றோ குப்பக்காட்டா ரென்றும் என்ன அதிசயமான படிப்பென்றும் எடுத்தெறிந்துபேசி னாள்.

கம்:—அம்மா ! கோபித்துக்கொள்ளவேண்டாம். குழந்தைக்குக் குடும்ப விஷயமான வார்த்தைகளொன்றுமே தெரியாது. எப்பொழுதும் புஸ்தகமும் கையுமாய் இருந்துவிட்டவள். அதிகமாய் ஒருவருடனுங் கூடப்பேசமாட்டாள்.

சுந்தரம்:—ஜானகி என்ன உங்கள் வீட்டில் நாலுநாழிகையாய் என்னமோ ஆக்ஷேபனை நடக்கிறதே.

விசாலாட்சி:—என்னமோ அந்தவழி தெரிந்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார் கள். உனக்கும் எனக்கும் என்ன தெரியும்.

சுந்:—அவ்விடத்தில் யார் சந்திரகாந்தமா? எப்பொழுது அம்மா வந்தாய், உன்னைப்பார்க்க எங்களுக்கு நெடுநாளாய் அபேக்ஷை. (மறுமொழி யாடவில்லை சந்திரகாந்தம்.)

சுந்:—மறுபடியும் என் அம்மா குழந்தாய். எப்பொழுது வந்தாய். (தலையை அசைந்தனள் சந்திரகாந்தம்.)

சுந்தரம்.
விசாலாக்ஷி. } நாங்கள் போய்வருகிறோம்.

சுந்:—விசாலாக்ஷி அடிதென்ன அந்தப்பெண் பேசக்கூடவில்லை, என்ன கர்வ மிது.

விசா:—உன் காதில் படவில்லையோ அவள் சொல்லியது. மறைவாய் அவள் தாயார் அழைத்து ஏனம்மா அவர்களுடன் பேசாமலிருக்கிறாய் பதில் சொல்லம்மா வென்றதற்கு வேலையில்லை, இவர்களிருக்கும் அந்தஸ்தும் விவேகமும் இவர்களோடெல்லாம் சரிக்குச்சரியாய்ப் பேச எனக்கிஷ்டமில்லை. வக்கிலாத்து ரங்கம் படித்தும் இருக்கிறாள் பூவும்போடுவாள் சள சள வென்று யாரோடாவது அந்தஸ்தைக் குறைத்துக்கொண்டு அதிகமாய் பேசுகிறாளா ? முண முணவென்று இவ்வளவு வார்த்தை சொன்னாளே.

சுந்:—நன்றாயிருக்கிறது, என்ன படிப்புபடித்துவிட்டாள், காலையில் எதை யோவைத்துக்கொண்டு தடமாடி இடம்முழித்துக்கொண்டிருந் தாளே. இதற்குத்தானா இவ்வளவு கர்வம். இமையவல்லியின் கமல

தூசிக்கூடப் பெறமாட்டாள். வம்புவார்த்தை சொன்னால் மாத்திரம் இமையவல்லி காதுகொடாளே தவிர, இப்படியா?

சுந் :—நன்றாயிருக்கிறது. எதற்கெதையொப்பிடுகிறாய், இவைகளெல்லாம் பெற்றவர்கள் கொடுக்குமிடம் எங்கள் மாமா பெண் பாரதம் ராமாயணம் கூடப்படிப்பாள் இப்படியா!

விசா :—நல்லவிதமான படிப்புபடித்தால் புத்தி விர்த்தியாகுமே தவிர இப்படிக்கெல்லாம் என்வரும். நமக்கேன் இந்தவம்பு, வீட்டில்வேலையிருக்கிறது நான் போய்வருகிறேன்.

சுந் :—நானும் வருகிறேன்.

ஜா :—நாம் போவதாயிருந்தால் சீக்கிரம் போகவேண்டும்.

கம :—குழந்தாய் புறப்படு இவ்விடத்தில் தான் என்ன செய்யப்போகிறோம். ஜானகி மிக்க வியந்து கூறுகிறாளே அதையுந்தான் பார்த்துவருவோம். மூவரும் இமயவல்லி வீட்டுக்குப்போகும்போது அதிபக்திரசமாகிய கண்ணப்பநாயனார் சரித்திரத்தில் ஈசன் பசித்திருக்கிறாரென்று ஆகாராதிகள் தேட நாலடி தூரம் செல்வார். ஐயோ! என்னையன் சிம்மசார்த்தூலங்கள் முதலாகிய துஷ்டமிருகங்கள் வாழும் அந்தகாரமான அடவியில் தனித்திருக்க எங்ஙனம் செல்வேனெனக் காலெழாமலேங்குவார். இப்பேர்க்கொத்த உருக்கமான விடத்தில் பாடலைச்சொல்லி தாற்பரியம் சொல்லிக் கொண்டிருந்தாளாயினும் வந்தவர்களை வருகவென்று தலையசைத்து உட்காரும்படி ஜாடை செய்து மேலே கூறிக்கொண்டிருந்தாள் இமையவல்லி. ஜானகி மாத்திரம் ஐயோ! இவர்களைத் திருத்தவேண்டி ஆதிமுதல் கேட்க இன்று தவறிவிட்டேனே, என்கிற மனஸ்தாபத்துடன் உட்கார்ந்தாள், மற்றவர்களும் உட்கார்ந்தார்கள். சந்திரகாந்தமும் கமலமும் ஊரிலிருந்து வந்தவர்களானபடியால் வீட்டிலிருந்த வயது சென்ற பாட்டி க்ஷேமம் விசாரிக்கும் நிமித்தம் அருகில்வந்து விசாரிக்கத் தொடங்கினாள்.

இன்னும் வரும்.

ருக்மணியம்மாள்.

புஸ்தகவரவு: ஆக்பர் சக்கரவர்த்தி. ஆரியசபா. [செட்டிலிங்கமையர் என்ற ஆர்டிகலும், அசலாம்பிகையம்மாள் எழுதிய ஆர்டிகலும் அடுத்தசஞ்சிகையில் அவசியம் வரும். ப.ர்.]

மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 2. | MADRAS: SEPTEMBER 1900. | No. 7.

புத்த. உ. | சென்னபட்டணம், 1900 - ஹு செப்டம்பர்-மீ. | இல. எ

புற்புலத்து நெட்டிலிங்மையர் வைபவம்.

(93-ம் பக்கத்தொடர்ச்சி.)

அப்பு.—அப்பா, நெட்டிலிங்கம், நீ தான் வெகுபுத்திமான்; என்னவோ யோகம் பண்ணுகிறாய் என்று ஜெம்பமடித்துக் கொள்ளுகிறாய்; ண்டு வெள்ளை வேஷ்டி கட்டிக்கொண்டு சேலத்துசோடுபோட்டுக் ண்டு சடக்சடக் என்று நடக்கிறாய்; நான் கேட்பதற்கு சரியான ப சொல்; அப்போது நீ கெட்டிக்காரன் தான். இல்லை, இந்த ஊரை பெ ரியவாள் சம்பாதித்த கிராமம் என்று கட்டிக்கொண்டு அழுகிறோமே இதைவிட்டு தணற்கால் கிராமத்துக்குகுடிபெயர்த்துக்கொண்டு போய் விட்டால் என்ன என்று ஐயாவைக் கேட்டேன். அதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?

நெட்டிலிங்கம்.—நல்லது நான் பதில் சொல்லுகிறது இருக்கட்டும். ஐயா என்ன சொன்னார். நமக்குள் ஐயா தான் மூத்தவர். அவர் சொன்ன தைச்சொல்; அப்புறம் நான் சொல்லுகிறேன்.

அப்பு.—இந்நா! இந்த கிருதுதானே ஆகாது! என்னவோ வள்ளிமலையில் 30 வராகன் சம்பளம்வாங்கிக்கொண்டு அங்கிருக்கும் மலைசர்களை எய்க் கிறாப்போல் எங்களையும் எய்க்கப்பார்க்கிறாயே! ஐயா சொன்னது தெ ரிந்தேயிருக்கிறது. எங்கு போகிறது. அதை நான் அப்புறம் சொல்லு கிறேன் நீ முதலில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல். தணற் காலுக்கு ஏன் நாம் குடிபெயர்த்துக்கொண்டு போகக்கூடாது.

நெட்டிலிங்கம்.—அப்பு, இந்த கோபந்தான், உன்னிடத்தில் எப்போதும் மூக்குக்குமேலே நின்றுகொண்டிருக்கிறதை நான் பார்த்திருக்கி றேன். நான் என்ன இப்பொழுது சொல்லிவிட்டேன். ஐயா என்ன சொன்னார் என்று கேட்டேன். இவ்வளவு தானே. நீ ஏன் அதற்கு இல்லாத பேச்செல்லாம் பேசுகிறாய்.